Commercial Space for Rent
550 Square feet at first floor
*Vijayanagar, Main Road, Velachery (Near Adyar Ananda Bhavan)*
**CONTACT**
**7305837388**

# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper – Weekly
*Free Circulation*

## ஆங்கில புத்தாண்டு சிறப்பிதழ்-2021

FOR ADVERTISEMENT IN EXPRESS VELACHERY
Timing
Monday to Friday
9.30 am to 6.00 pm
Saturday
9.30 am to 12.30 pm
CONTACT
044- 42077325
7305837388

VOL - 3 ISSUE - 4 Editorial : 044-42077325 / 7305837388 email : expressvelachery@gmail.com














# இங்கிலாந்தில் வேகமாக பரவும் புதிய வகை கொரோனா வைரஸ்

இங்கிலாந்தில் வேகமாக பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் ஆபத்தானதா...? உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

இங்கிலாந்தில் புதிய வைரஸ் வேகமாக பரவுவதால் பிரதமர் போரிஸ் ஜான்சன் நாட்டின் மிகக் கடுமையான ஊரடங்கை அறிவித்தார். வைரஸ் அதன் தாக்குதல் முறையை மாற்றும்போது,நாம் நமது பாதுகாப்பு முறையை மாற்ற வேண்டும்," என்று அவர் கூறினார். இங்கிலாந்தில் வேகமாக பரவி வரும் இந்த வைரஸ் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. கொரோனா ஏற்படுத்திய இழப்புகளில் இருந்து தங்கள் மக்கள் இன்னும் மீளாத நிலையில் மற்றொரு வைரசும் மிரட்டுவது அரசுகளுக்கு மிகுந்த பீதியை கொடுத்து இருக்கிறது. இங்கிலாந்தில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 36 ஆயிரம் கொரோனா பாதிப்புகள் பதிவாகியுள்ளன. ஒரு வாரத்திற்கு முன்பு இது பாதியாக இருந்தது. 300-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் -பட்டுள்ளது.

இங்கிலாந்தில் இதுவரை 20 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கொரோனா நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட் -டுள்ளனர். 67,000-க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர். கொரோனா வைரஸ், சூழ்நிலைக்கு ஏற்ப வளர்சிதை மாற்றம் அடைந்திருப்பததை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். இந்த புதிய வகை கொரோனா வைரஸ் பழைய கொரோனா வைரசை காட்டிலும் வேகமாக பரவும் தன்மை உடையதாகவும், வீரியமாக இருப்பதாவும் தெரியவந்து உள்ளது. இந்த வைரஸ் வேகமாக பரவி வருவதால் இத்தாலி, இந்தியா, சவூதி, பெல்ஜியம், நெதர்லாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இங்கிலாந்துடனான விமான போக்குவரத்திற்கு தடை விதித்துள்ளன.

பிரிட்டனில் புதியவகை கொரோனா வைரஸ் தொற்று தீவிரமாக பரவுவதை அடுத்து டுவிட்டரில் COVID 20 ஹேஷ்டேக் டிரெண்டாகி வருகிறது. புதிய வகை கொரோனா வைரஸ் தாக்கத்தால் இங்கிலாந்தில் புதியக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளார் பிரதமர் போரிஸ் ஜான்சன். மேலும், வைரஸ் பரவலைத் தடுக்க பல ஐரோப்பிய நாடுகளும், கனடா, டென்மார்க், ஈரான், குரேஷியா, பல்கேரியா, அயர்லாந்து, துருக்கி, இஸ்ரேல், பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, ஹாங்காங், சுவிட்சர்லாந்து, அர்ஜென்டினா, பெல்ஜியம், சிலி, மொராக்கோ, குவைத், ஆஸ்திரியா மற்றும் இத்தாலி போன்ற நாடுகள் இங்கிலாந்துக்கு விமான போக்குவரத்தை ரத்து செய்து விட்டன. அதேநேரம் சவுதி அரேபியாவோ, அனைத்து நாடுகளுக்கும் விமான சேவையை ரத்து செய்து, தனது எல்லைகள் அனைத்தையும் மூடி விட்டது. இந்தப் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது. இந்தியாவும் பிரிட்டனில் இருந்து வரும் அனைத்து விமானங்களும் இந்தியா தடை விதித்து உள்ளது. பொதுவாக, வைரஸ்களைப் பொறுத்தவரை, அவை பரவப் பரவ பரிணாம வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும். அதனால்தான் வருடந்தோறும் புதிய தடுப்பூசிகள் போடப்படுகின்றன. கடந்த ஆண்டு சீனாவில் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்தே அது உருமாற்றம் அடைந்து கோண்டே தான் இருக்கிறது. இங்கிலாந்து, இத்தாலி, ஆஸ்திரேலியா மற்றும் தென்னாப்பிரிக்காவில் பரவி வரும் புதிய வகை கொரோனா வைரஸ் எளிதாக பரவுவதற்கான 70 சதவீத காரணிகளைக் கொண்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதுபற்றி வைரஸ் நிபுணர்கள் கூறுகையில், எளிதாகவும் விரைவாகவும் பரவுவதற்கான காரணம் இதுவரை தெளிவாகக் கண்டறியப் -படவில்லை. அவை தடுப்பூசிகளின் பலன்களை பாதிக்குமா அல்லது நோய்த்தொற்றைப் பரப்புமா என்பது அடுத்தடுத்த ஆய்வு முடிவுகளில்தான் தெரியவரும்.

இதுகுறித்து பிரிட்டிஷ் அரசின் தலைமை அறிவியல் ஆலோசகர் பாட்ரிக் வால்லன்ஸ் கூறியது தற்போது பரிணாம மாற்றமடைந்துள்ள புதிய வைரஸானது மற்ற வைரஸ்களைவிட எளிதில் பரவக்கூடிய வகையில் இருப்பதாக இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் உள்ள சுகாதார நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், இவை மிகவும் ஆபத்தானவை என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்கின்றனர். மேலும், இந்த வைரஸானது பரவுவதில் அதிக வீரியம் காட்டுகிறது என்றும், டிசம்பர் மாதத்துக்குள் லண்டனில் 60 சதவீதம் பேருக்கு நோய்த்தொற்று ஏற்படும் என்றும் இந்தப் புதிய வகை பரிணாமத்தில் பல பிறழ்வுகள் இருக்கின்றன. அதில் பலவற்றில் வைரஸ்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொள்ளக் கூடியதும், செல்களில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதுமான ஸ்பைக்கி புரதங்கள் இருக்கின்றன. அந்த ஸ்பைக்குகள் தான் தற்போதைய தடுப்பூசிகளை குறிவைத்துள்ளது. என கூறுகின்றனர்.

## கிறிஸ்துமஸ் தீவு

கிறிஸ்துமஸ் தீவு ஆட்சிப்பகுதி இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள ஆஸ்திரேலியாவின் ஒரு சிறிய ஆட்சிப்பகுதியாகும். இது போர்த் நகரிலிருந்து 2600 கி.மீ. (1600 மைல்) வடமேற்கிலும் ஜாகார்த்தா நகரிலிருந்து 500 கி.மீ. (300 மைல்) தெற்காகவும் அமைந்துள்ளது. இங்கு காணப்படும் சில குடியேற்றங்களில் சுமார் 1600 பேர் வரை வசிக்கின்றனர். இங்கு காணப்படும் புவியியல் இயற்கை அமைப்பு ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்ததாகும். இத்தீவிற்கே உரிய பல உயிரினங்கள் காணப்படுகின்றன. கனிய அகழ்வு இத்தீவின் முக்கிய தொழிற்துறையாக விளங்குகின்றது.

இங்கிலாந்து கிழக்கிந்தியக் கம்பெனியில் பணிபுரிந்த மாலுமி வில்லியம்ஸ் மைனர்ஸ் இவர் ராயல்மேரி என்ற கப்பலை 1643ல் ஓட்டிச்சென்றார். அப்போது அவர் சென்ற வழியில் ஒரு தீவை பார்த்தார். அன்றைய தினம் கிறிஸ்துமஸ் தினம் என்பதால் அதற்கு கிறிஸ்துமஸ் தீவு என பெயரிட்டார்.

## சொல்லுங்க தெரிஞ்சிக்கிறோம்

- புதன் கிழமைகளில் பவள மல்லிகைப் பூக்களால் மகாவிஷ்ணுக்கு அர்ச்சனை செய்தல் நியாபகசக்தி வளரும். கல்வி வளர்ச்சி ஏற்படும்.
- கோவில் பிரகாரத்தை சுற்றி வரும்போது பரபரப்பு, வேகம் கூடாது. நிதானமுடன் தெய்வ சிந்தனையுடன் நடக்க வேண்டும்.
- கோவிலுக்கு சென்று வீட்டுக்கு வந்ததும் கை கால்களை கழுவ கூடாது.
- இரண்டு அமாவாசை பவுர்ணமி ஒரே தமிழ் மாதத்தில் வந்தால் அதில் திருமணம் நடத்த கூடாது.
- காலையும், மாலையும் வீட்டை சுத்தப்படுத்தி விளக்கேற்றும் வீட்டில் மகாலட்சுமி நித்யவாசம் செய்வாள்.

## பெட்ரோல், டீசல் விலை நிலவரம்

| பெட்ரோல்விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| ₹ 86.51 | ₹ 79.21 |
| விலையில் மாற்றம் இல்லை | விலையில் மாற்றம் இல்லை |

நாடு முழுதும், வைரஸ் பரவலை தடுக்க, மார்ச் இறுதியில், ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. இதனால், மே வரை, பெட்ரோல், டீசல் விலையில் எந்த மாறுதலும் செய்யாமல் இருந்த பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள், ஜூன் மாதம் தொடங்கிய முதல், டிசம்பர் வரைஅவற்றின் விலையை உயர்த்திக் கொண்டே வருகின்றன.

சென்னையில் நேற்று பெட்ரோல், லிட்டர் 86.51 ரூபாய், டீசல் லிட்டர்79.21 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்நிலையில், பெட்ரோல் விலை இன்றும் மாற்றம் செய்யப்படவில்லை. டீசல் விலையிலும் மாற்றம் செய்யப்படாமல் ஒரே விலையில் நீடிக்கிறது.

## திருக்குறள்

**தமிழ்**

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ வார்.**

**English**

**Long live the they best, who 've stood in path from falsehood freed;**
**His, 'who quenched lusts that from the sence-gates five proceed'.**

## பொன்மொழிகள்

பொய் சொல்லி தப்பிக்க நினைக்காதே
உண்மையை சொல்லி மாட்டிக் கொள். ஏனென்றால்
பொய் வாழ விடாது. உண்மை சாகவிடாது.
- விவேகானந்தர்

## யோகாசனம்

### வக்ராசனம்



- முதுகுத்தண்டின் அசைவுகளை இலகுவாக்குவதற்கு மிகவும் சிறந்தது.
- கழுத்து இறுக்கம், முதுகு பிடிப்பு ஆகியவைகள் சரியாகும்.
- வயிறு மற்றும் இடுப்பு சதைகளின் குறைபாடுகள் நீக்கப்பெறும்.
- அடிவயிற்றில் ஏற்படும் பிரச்சனைகளை சீராக்கி இரத்த ஓட்டம் சுரப்பிகளுக்கு சென்று சீராக இயங்க வைக்கின்றது.

# இந்த வார ராசிபலன்



**மேஷம்**

இந்த நேரத்தில் நீங்கள் பணத்தைப் பெறுவீர்கள், உங்கள் பொருளாதார வாழ்க்கை வலுவாக இருக்கும். உங்கள் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியும் செழிப்பும் இருக்கும்.



**துலாம்**

நீங்கள் பணித்துறையில் மரியாதை மற்றும் நன்மைகளைப் பெறுவீர்கள். அதே நேரத்தில், வியாபாரம் செய்பவர்கள், இந்த நேரத்தில் ஒரு நல்ல ஒப்பந்தத்தைப் பெறுவர்.



**ரிஷபம்**

சில காலமாக சுகாதார பிரச்சினைகள் உள்ளவர்களின் ஆரோக்கியத்தில் சாதகமான மாற்றங்கள் ஏற்பட ஒவ்வொரு சாத்தியமும் உள்ளது. இந்த நேரத்தில் உங்களுக்கு மன இறுக்கம் இருக்கலாம்.



**விருச்சிகம்**

இந்த நேரத்தில் உங்கள் குடும்பத்தில் செழிப்பு இருக்கும் மற்றும் சில நல்ல வேலைகள் செய்வதற்கான வாய்ப்புகளும் உள்ளன. இந்த நேரத்தில் உங்கள் தாயும் மகிழ்ச்சியைப் பெறுவார்.



**மிதுனம்**

இந்த நேரம் பண விஷயங்களில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் செலவினங்களைச் சரிபார்க்கவும், இந்த ராசியின் பணியாளர்கள் பணியிடத்தில் பதவி உயர்வு பெறலாம்.



**தனுசு**

இந்த நேரத்தில் நீங்கள் எந்த வேலைகளையும் செய்ய திட்டமிடலாம். அதிர்ஷ்டம் உங்களை முழுமையாக ஆதரிக்கும். உங்கள் மரியாதையும், கவுரவமும் சமூகத்தில் காணப்படும்.



**கடகம்**

உங்கள் அதிகாரிகளுடனான உறவுகள் மோசமடைய வாய்ப்புள்ளது. இந்த நேரத்தில் நீங்கள் லாபம் பெற வாய்ப்பு உள்ளது. இந்த ராசிக்காரர் மாணவர்க -ளின் கல்விக்கு இடையூறு ஏற்படலாம்.



**மகரம்**

உங்களுக்கு எதிரிகளுடன் ஒருவித சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் மன அழுத்தம் அதிகரிக்கும். உடல்நலத்தைப் பார்த்துக் கொள்வது நல்லது.



**சிம்மம்**

இந்த நேரம் உங்கள் கடின உழைப்பு அதிகரிக்கும், அதனால் நீங்கள் வெற்றியைப் பெறுவீர்கள். புணியிடத் -தில் உள்ள உங்கள் மூத்த சகாக்கள் உங்கள் வேலையைப் பாராட்டலாம்.



**கும்பம்**

இந்த நேரத்தில் உங்கள் குடும்பம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். உங்கள் தாயாரின் ஆரோக்கியமும் மேம்படும். இந்த ராசிக்காரர் பணியிட -த்தில் நன்மைகளைப் பெறுவார்கள்.



**கன்னி**

இந்த நேரத்தில் உங்கள் செலவுகளை நிர்வகிப்பது உங்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும். வெளிநாட்டு நிறுவனங்களில் வேலை செய்யும் இந்த ராசிக்காரர்களுக்கு இந்த நேரம் நன்றாக இருக்கும்.



**மீனம்**

உங்கள் தைரியமும் மற்றும் வீரமும் அதிகரிக்கும், இந்த நேரத்தில் நீங்கள் கடினமான பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் தனிப்பட்ட முயற்சிகள் உங்களுக்கு பயனளிக்கும். நீங்கள் சிறிது தூரம் பயணிக்கலாம்.

## ஆன்மீக பகுதி

# மார்கழி மாத இறைவழிபாடு

மார்கழி மாதம் என்றால் தெய்வ வழிபாட்டிற்கு உகந்த மாதம் என்பது நாம் எல்லோரும் அறிந்த ஒன்று தான். மார்கழி மாதம் முழுவதும் காலைவேளையில் கோயிலுக்கு சென்று இறை வழிபாடு செய்வது மிகவும் நல்லது.

உங்கள் வீட்டின் அருகில் இருக்கும் கோவில்களில் எந்த கோவிலில் ஸ்தலவிருட்சம் இருக்கின்றதோ, அந்த கோவில்களுக்கு சென்று, அந்த மரத்தின் அடியில் அமர்ந்து 10 நிமிடங்கள் கண்களை மூடி, தியான நிலையில் உங்களது கோரிக்கைகளை இறைவனிடம் வைத்து வழிபாடு செய்வது என்பது மிகவும் சிறப்பான வழிபாடாக சொல்லப்படுகிறது.

அரசமரம், வேப்பமரம், அத்தி மரம், வில்வமரம், இப்படியாக எந்த மரம் கோவில் வளாகத்தில் இருந்தாலும் சரி, அந்த இடத்திற்கு சென்று உங்களது வேண்டுதல்களை இறைவனிடம் சொல்லி மனதார வேண்டிக் கொள்ளுங்கள். அந்த வேண்டுதல் நிச்சயம் இறைவனின் செவிகளில் விழும். கோவிலுக்கு சென்று உங்களால் வழிபாடு செய்ய முடியவில்லை எனும் பட்சத்தில், அரசமர இலையையோ, வேப்பமர இலையையோ, வில்வ இலையையோ அல்லது துளசி இலையை மட்டுமாவது உங்களது உள்ளங் கைகளில் வைத்துக்கொண்டு வேண்டுதலை செய்யலாம்.

வெளிக்காற்று உங்கள் மேல் படும்படி ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டு, இந்த இலைகளில் ஏதாவது ஒரு இலையை உங்களது கையில் வைத்துக் கொண்டு, உங்களது வேண்டுதலை பிரபஞ்சத்திடம் சொல்லி, வேண்டுதல் வைக்கும் பட்சத்தில் அந்தப் பிரார்த்தனை விரைவாக நிறைவேறும். முடிந்தவரை காலை 7:00 மணிக்கு முன்பாகவே உங்களது வேண்டுதலை பிரபஞ்சத்திடம் சொல்ல பாருங்கள்.

மார்கழி மாதம் மட்டும் அல்ல எந்த நாளாக இருந்தாலும், எவரொருவர் அதிகாலையில் எழுந்து இறைவழிபாடு செய்து விட்டு தன்னுடைய வேலையை தொடங்குகின்றாரோ, அவர்களது வாழ்க்கையில் முன்னேற்றம் என்பது அதிவிரைவாக இருக்கும். இருப்பினும் மார்கழி மாதத்தில் அறிவியல் ரீதியாக ஓசோன் வாயுவை சுவாசிப்பதன் மூலம் நமக்கு அதிகப்படியான நன்மைகள் கிடைக்கின்றது.

ஆன்மீக ரீதியாகவும் பிரபஞ்சத்தில் இருந்து பூமிக்கு கிடைக்கப்படும் தெய்வ சக்தியானது, மற்ற மாதங்களை விட இந்த மாதத்தில் அதிகமாக கிடைக்குமென்றும் சொல்லப்பட்டுள்ளது. முழு நம்பிக்கையோடு இந்த இறை வழிபாடு செய்தல் நிச்சயம் வெற்றி உங்கள் பக்கம்.

# சகல நன்மைகளும் உண்டாகும் வைகுண்ட ஏகாதசி

***25.12.2020 வைகுண்ட ஏகாதசி அன்று பல கோவில்களில் பக்தர்கள் விரதம் இருந்து பெருமானை வழிபட்டனர்.***

மார்கழி மாதம் வரும் சுக்ல பட்ச (வளர் பிறை) ஏகாதசித் திரு நாளை, வைகுண்ட ஏகாதசி என்று போற்றுவர். அந்த நாளில் முறைப்படி விரதம் இருந்து, சொர்க்கவாசல் வைபவத்தைக் காண்பவர்களுக்குப் பாவங்கள் தொலையும் சகல நன்மைகளும் உண்டாகும் என்கின்றன.

### உற்பத்தி ஏகாதசி

முராசுரன் என்பவனால் மிகந்த துன்பங்களுக்கு ஆளான தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர்களிடம் திருமாலிடம் சரண் புகுமாறு அறிவுறுத்தினார் சிவனார். அதன்படி அனைவரும் திருமாலிடம் சென்று வேண்டிக் கொண்டனர். அவர்களைக் காப்பாற்ற திருவுளம் கொண்ட திருமால், அசுரனுடன் போரிடத் துவங்கினார். ஆயிரம் ஆண்டுகள் நீடித்தது போர். நிறைவில், போரில் களைப்புற்றவராக பத்ரிகாஸ்ரமம் குகைக்கு வந்து ஓய்வெடுத்தார் பெருமாள். அங்கேயும் வந்து போருக்கு அழைத்தான் முரன். ஆப்போது, திருமாலின் சக்தி ஒரு பெண் வடிவில் வெளிப்பட்டது. இந்தச் சக்தியை அசுரன் நெருங்கும் வேளை... அவளிடம் இருந்து வெளிப்பட்ட பெரும் ஓலம், அசுரனை எரித்துச் சாம்பலாக்கியது.

துயில் எழுந்த பெருமாள், அந்தப் பெண்ணுக்கு ஏகாதசி என்று பெயரிட்டார். உன்னை வழிபடுபவர்களுக்கு வைகுண்டப் பேறு அளிப்பேன் என்று வரம் தந்தார். இங்ஙனம் பெண்சக்தி திருமாலின் மேனியில் தோன்றிய தினத்தையே உற்பத்தி ஏகாதசி என்கிறோம்.

### .ஏகாதசியும் நெல்லிக்கனியும்

ஏகாதசி அன்று நெல்லி இலை மற்றும் கனி இடப்பட்ட ஜலத்தில் நீராடி நியமத்துடன் விரதம் கடைப்பிடித்து, மகாவிஷ்ணுவை வழிபட்டு, துவாதசி அன்று உணவில் நெல்லிக்கனியை சேர்த்துக் கொண்டு விரதத்தைப் பூர்த்தி செய்வது சிறப்பாகும். இதனால் கங்கையில் நீராடிய பலனும் காசியில் வசித்த புண்ணியமும் கிடைக்கும் என்கின்றன

### சொர்க்கவாசல் வைபவம் ஏன்?

மகாவிஷ்ணுவால் வதம் செய்யப்பட்டதால் பரமபத பாக்கியம் பெற்றவர்கள் மது-கைடபர். இந்த அசுரர்கள், தங்களுக்குக் கிடைத்த வைகுண்டப் பேறு உலக மாந்தர்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று விரும்பினர்.

எனவே, வைகுண்ட ஏகாதசித் திருநாளில் திருவரங்கம் வடக்கு வாசல் வழியாக அர்ச்சாவதாரத்தில் (உற்ஸவ மூர்த்தியாக) தாங்கள் வெளிவரும்போது, தங்களை தரிசித்து பின்தொடரும் பக்தர்களின் பாவங்களை நீக்கி முக்தி அளிக்க வேண்டும் என்று பெருமாளிடம் பிரார்த்தித்தனர். அப்படியே அருள் செய்தார் பெருமாள். இதன்பொருட்டே, சொர்க்க வாசலைத் திறந்து கலியுக மக்களுக்கும் மோட்சத்துக்கு வழி கிடைத்தது.

### விரதம் இருப்பது எப்படி?

ஏகாதசிக்கு முதல் நாள் திருமாலை வணங்கி விரதம் தொடங்க வேண்டும். அன்று, பகலில் ஒரு வேளை மட்டும் சாப்பிடலாம். ஏகாதசி தினத்தில் துளசியைப் பறிக்கக் கூடாது. முதல் நாளே பறித்து வைத்துக் கொள்ளலாம்.

ஏகாதசியன்று அதிகாலையில் கண் விழித்து, காலைக்கடமைகளை முடித்து, மகாவிஷ்ணுவை பூஜிக்க வேண்டும். பெருமாள் ஆலயங்களில் நடைபெறும் வழிபாட்டு வைபவங்களை தரிசிப்பது சிறப்பு. அன்று இரவு முழுவதும் கண்விழித்து புராண நூல்களைப் படிப்பதும், பகவான் நாமங்களைச் சொல்வது மாக இருக்க வேண்டும்.

ஏகாதசிக்கு மறுநாள் துவாதசி. அன்று உணவு அருந்துவதை பாரணை என்பர். துவாதசி அன்று அதிகாலையில் நீராடி, இறைவனைப் பிரார்த்தித்த பிறகு, கோவிந்தா கோவிந்தா என்று மூன்று முறை கூறி சாப்பிட்டு விரதத்தை முடிக்க வேண்டும். அதனால் 25.12.2020 வைகுண்ட ஏகாதசி அன்று பல கோவில்களில் பக்தர்கள் விரதம் இருந்து பெருமானை வழிபட்டனர்.



# பாட்டி வைத்தியம்

## நரம்பு தளர்ச்சி குணமாக:

❖ நரம்பு தளர்ச்சி உள்ளவர்கள் பொன்னாங்கண்ணி கீரை, மணத்தக்காளி கீரையை பகல் உணவில் சேர்த்து கொள்வது மிகவும் நல்லது.

❖ நரம்பு தளர்ச்சி குணமாக கசகசாவை ஒரு ஸ்பூன் எடுத்து வாயில் போட்டு நன்றாக மென்று சாப்பிட்டு வர கூடிய விரைவில் நரம்பு தளர்ச்சி பிரச்சனை குணமாகும்.

❖ பச்சை வெங்காயத்தை அதிகம் சாப்பிட்டு வர நரம்பு தளர்ச்சி குணமாகும்.

❖ ஜாதிக்காய் பவுடரை சிறிய சுண்டைக்காய் அளவு எடுத்து காலை மாலை இரண்டு வேலைகளும் பால் அல்லது தேனில் கலந்து தொடர்ந்து சாப்பிட்டு வர நரம்பு தளர்ச்சி குணமாகும்.

❖ சாப்பிடும் உணவில் வாழைப்பூவை அதிகம் சேர்த்துக்கொள்ள நரம்பு தளர்ச்சி பிரச்சனை குணமாகும்.


**3BHK FLAT FOR SALE**

**Area : 1418 Square feet**
**UDS : 749 Square feet**

**flat no, FA, 65B, Ram Villa,**
**Dr.Ambedkar salai, Periyar nagar Extn.,**
**Madipakkam [near siva vishnu temple]**

contact: 9500077905

# Chutties Corner

## BIRTHDAY WISHES



R.D. Pughazh
Chitlapakkam
December 29



Sri Ganesh
Madipakkam
December 29


## வண்ணம் தீட்டுக






5 star ratings from your parents

## CHRISTMAS TREE DECORATION




M. Aadith,UKG & M. Diya Sudhakar, II Std
from Dhandeeswaram Nagar,
Velachery

## Paper Craft




## தனித்திறமை பகுதி

### Drawing




AISHWARYA
Rajalakshmi
Nagar



## ஜப்பானில் 7 அடி உயரத்துக்கு வரலாறு காணாத அளவு பனிப்பொழிவு

*ஜப்பானில் வரலாறு காணாத அளவு பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது*


டிசம்பர் மாதம் தொடங்கி பிப்ரவரி மாதம் வரை உலகின் ல நாடுகளில் கடும் பனிப்பொழிவு இருக்கும். அந்த வகையில், ஜப்பான் நாட்டில் வரலாறு காணாத அளவு பணிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. வழக்கத்துக்கு மாறாக 7 அடி வரையில் பனி சூழ்ந்துள்ளதால் அந்நாட்டில் உள்ள பெரும்பாலான தேசிய நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன. ஜப்பானின் டோக்கியோ நிகாட்டா நகரங்களை இணைக்கும் கான்-எட்சு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலையில் கடுமையான பனிப்பொழிவு காரணமாக சுமார் 1000க்கும் மேற்பட்ட வாகனங்கள் சிக்கிக் கொண்டன. இதனால், கடுமையாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. வாகனங்களில் பயணம் செய்தோர் சுமார் 40 மணி நேரமாக கடும் குளிரில் சிக்கித் தவித்ததால் அவர்களுக்கு உணவு பொருட்கள் தன்னார்வலர்கள் மூலம் வழங்கப்பட்டன.

உடல்நிலை பாதிக்கப்பட்ட சிலரை மீட்டு போக்குவரத்து அதிகாரிகள் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். இன்னும் ஓரிரு நாட்களுக்கு இதே நிலை தான் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சாலையை சீரமைக்க அதிகாரிகள் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். அந்நாட்டின் வடக்குப் பகுதி நகரங்களில் ஏற்பட்டுள்ள இந்த பனிப்பொழிவால், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் மின்சார சேவைகள் துண்டிக்கப்பட்டு -ள்ளது. இதனிடையே, பனி மற்றும் பனிச்சரிவு உள்ளிட்டவைகள் ஏற்படலாம் என்று ஜப்பான் வானிலை ஆய்வு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அதேபோல், அமெரிக்காவில் இந்த ஆண்டின் பனிக்காலம் சில நாட்களுக்கு முன் தொடங்கிய நிலையில், தற்போது பனிப்பொழிவு அதிகரித்து வருகிறது.

NISHA YOGA & MEDITATION CENTRE
VELACHERY
Online class for women and kids
Monday to Friday
5.30 am to 6.30am
&
4.45 pm to 6.00 pm
Yoga classes for
- Fitness
- Weight loss
- PCOD
- PCOS
- Thyroid, etc., Are also undertaken.
By professional trainer,
Mrs.NISHA
FOR ALL AGE CATEGORIES / CONTACT : 89391 53560

நியூயார்க் நகரில் சாலைகளில் அதிக அளவு பனி படர்ந்திருந்ததால் அதை இயந்திரங்கள் மூலம் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த நாட்டின் நாட்டின் வடகிழக்கு பகுதியிலும் பனிப்பொழிவு அதிகரித்துள்ளது இதனால், பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என அறிவுறுத்தப் -பட்டுள்ளது.

## பாதை விளையாட்டு



குட்டி முயல்,
அதன் அம்மாவிடம்
சென்றடைய வழிகாட்டி
உதவுங்கள் குட்டிஸ்!





## மெரினா கடற்கரையில் மக்கள் கூட்டம்



கொரோனா ஊரடங்கு காரணமாக மார்ச் மாதம் இறுதி முதல் கடற்கரை, பொழுது போக்கு பூங்காக்களுக்கு பொதுமக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டது. அதன்பின்னர் படிப்படியாக தளர்வுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. ஏனினும் சென்னையின் மிக முக்கிய சுற்றுலா தலமான மெரினா கடற்கரைக்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

கடந்த சில நாட்களுக்கு முன்பு சென்னை மெரினா உள்ளிட்ட கடற்கரைகளில் பொதுமக்கள் செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்ட நிலையில மெரினா கடற்-கரையை சுற்றிப் பார்க்க பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக வரத்தொடங்கின. 8 மாத இடைவெளிக்குப் பிறகு மெரினா கடற்கரை திறக்கப்பட்டதால் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடற்-கரையில் இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை உடற் பயிற்சி மேற்கொள்கின்றனர். இளைஞர்கள் ஆங்காங்கே விளையாட்டு பயிற்சியில் ஈடுபடுன்றனர். இதேபோல் திருவான்மியூர், பெசன்ட்நகர், நீலாங்கரை, மாமல்லபுரம் கோவில் கடற்கரை உள்ளிட்ட இடங்களிலும் பொது மக்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள பூங்காக்கள், நீச்சல்குளங்கள் உள்ளிட்ட இடங்களிலும் பொதுமக்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. . கொரோனா அச்சுறுத்தல் இருப்பதால் சுற்றுலா தலங்களுக்கு வரும் மக்கள் சமூக இடைவெளியை கடைப்பிடிப்பதுடன், முககவசம் அணிந்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.






## புத்தாண்டை முன்னிட்டு வெளியிடப்படும் இந்த நாவலை அமேசான் மூலம் சுலபமாக வீட்டில் இருந்தபடியே பெற்றுக்கொள்ளவும்.

[ இது பெண்களை கவர கூடிய குடும்ப நாவல்.. அனைத்து தரப்பினருக்கும் எளிதில் புரியும்படி எளிமையான நடையில் கையாளப்பட்டுள்ளது.. படித்து பயன் பெறுங்கள்..]




## என்னுரை

வணக்கம். "ஆதன்" என்றால் ஆத்மா; "யாக்கை" என்பது உடல்; இவை இரண்டையும் கட்டி வைக்கும் பந்தமாக இருப்பது உயிர் என்ற ஒன்று.

இக்கதையில் உடல், உயிர் மற்றும் ஆன்மாவின் உணர்வுகளைப் பற்றி நான் உணர்ந்த உண்மைகளை, சில கதாபாத்திரங்கள் மூலம் உங்களுக்கு உணர்த்திட விரும்பி, சில உண்மை சம்பவங்களை சுவாரசியமாகவும், கதைத்துவமாகவும் தருவதற்காக, சற்று மாற்றி எழுதி படைத்திருக்கிறேன். அன்றாட வாழ்க்கையில் நீங்கள் சந்தித்தும், புரிந்துகொள்ள நேரமில்லாமல் விட்ட எத்தனையோ விஷயங்களை நினைவூட்டும் விதமாக, இந்தக் கதையை அமைத்திருக்கிறேன்.

இதில் வரும் சம்பவங்களைத் தெரிந்து கொள்வதால், நாம் ஒவ்வொருவரின் வாழ்க்கையுமே ஒரு பெரிய சகாப்தம்தான் என்பதையும் நேற்றோடு வேகமாய் ஓடிப்போன கடந்த காலத்தைப் பற்றிய தகவலை இன்றி, இன்று காணும் அனைத்தையுமே தைரியத்தோடும், முழுமனதோடும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் கிடைக்கும் என்று முழுமையாய் நம்புகிறேன். அதற்கு என் படைப்பு ஏதோ ஒரு விதத்தில் நிச்சயம் உதவும் என்றும் எதிர்பார்க்கிறேன்.

நன்றி.

அன்புடன்
சரண்யா ராஜேஷ்



## இயற்கை அழகு குறிப்பு

இன்றைய காலத்தில் தலைமுடியை சரியாக பராமரிக்காவிட்டால், மாசடைந்த சுற்றுச்சூழலால் தலைமுடி பலவீனமாகி, உதிர ஆரம்பிப்பதுடன், பொலிவிழந்து, வறட்சியுடன் நார் போன்று காணப்படும். தலைமுடியின் ஆரோக்கியத்தை மேம்படுத்த எத்தனையோ இயற்கை பொருட்கள் உள்ளன. ஆதில் செம்பருத்தி மிகவும் சிறந்தது.

இப்போது செம்பருத்தியின் பொடியைக் கொண்டு எப்படி தலைமுடி பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது என காணலாம். செம்பருத்தி பொடி என்பது செம்பருத்தி இலை, பூ இரண்டும் சேர்ந்தது. இரண்டையம் சம அளவு எடுத்து நிழலில் காய வைத்து பொடி செய்து கொள்ளவும். நாட்டு மருந்து கடைகளில் விற்கப்படும் செம்பருத்தி பொடியையும் பயன்படுத்தலாம்.

- செம்பருத்தி பவுடர் நல்ல ஹேர் கிளின்சராகவும் பயன்படுகிறது. அதற்கு செம்பருத்தி பொடியை நீர் சேர்த்து பேஸ்ட் செய்து, ஸ்கால்ப்பில் படும்படி தடவி 10 நிமிடம் ஊற வைத்து, பின் சீகைக்காய் பயன்படுத்தி தலைமுடியை அலச வேண்டும். இதனால் தலையில் உள்ள அதிகப்படியான எண்ணெய் வெளியேறிவிடும்.
- 1 டேபிள் ஸ்பூன் தயிர் மற்றும் தேங்காய் பாலுடன், 2 டேபிள் ஸ்பூன் செம்பருத்தி பொடியை சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, தலையில் தடவி, 30 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இப்படி வாரத்திற்கு 2 முறை செய்து வந்தால், தலைமுடி வலிமையாக இருக்கும்.
- ஒரு பௌலில் 1 டேபிள் ஸ்பூன் சிவப்பு செரும்பருத்தி பொடியுடன், 3 டேபிள் ஸ்பூன் தயிர் மற்றும் சில துளிகள் ரோஸ்மேரி எண்ணெய் சேர்த்து கலந்து, தலையில் தடவி நன்கு ஊற வைத்து பின் அலச வேண்டும். இதனால் தலைமுடி உதிர்வது குறையும்.

## மெகந்தி டிசைன்








# தீமைகள் விலகும் திருநள்ளாறு சனிஸ்வரன் பகவான் கோவில்

**சனிபகவானுக்கு உரிய பரிகாரத் தலமாகத் திகழ்கிறது திருநள்ளாறு திருத்தலம். தர்ப்பை அடர்ந்து வளர்ந்திருந்த காரணத்தால், இந்தப்** பகுதி தர்ப்பாரண்யம் என்று முதலில் வழங்கப்பட்ட பின்னர் நகவிடங்கபுரம் என்றும் பெயர் பெற்றது. இங்கு அமர்ந்து இருக்கும் ஈசனின் திருப்பெர்ப்பாரண்யேஸ்வரர். அம்பிகையின் திருப்பெயர் பிராணேஸ்வரி. நளமகாராஜனை, சனிபகவானின் பீடிப்பிலிருந்து விடுவித்து, மறுபடியும் வளமான வாழ்க்கைக்கு ஆற்றுப்படுத்திய தலம் இது என்பதால் நள்ளாறு என அழைக்கப்படுகிறது. சுயம்புவாக தர்ப்பைவனத்தில் தோன்றியதால் ஈசன் தர்ப்பைத் தழும்புகளுடன் காட்சி தருகிறார். தேவார மூவரான அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோர்களால் பாடல் பெற்ற தலம் இது.

சனிபகவானின் தோஷம் நீங்க விரும்புபவர்கள், இந்தத் தலத்தில் திருஞானசம்பந்தர் அருளிய ‘‘போகமார்த்த பூண்முலையாள்’’ என்று தொடங்கும் பதிகம் பாடுவது நல்லது. சமணர்களுக்கு எதிரான சம்பந்தரின் அனல் வாதத்தில், இந்தப் பதிகம் எழுதப்பட்டிருந்த சுவடிகள் மட்டும் கருகாமல் இருந்ததால் ‘‘பச்சைப் பதிகம்’’ என்ற சிறப்புப் பெயரால் வழங்கப்படுகிறது. விஷ்ணு, பிரம்மன், இந்திரன், அஷ்டதிக்கு பாலகர்கள், அகத்தியர், புலஸ்தியர், அர்ஜுனன், நளன் உள்ளிட்ட பலரும் வழிபட்ட ஈசன் இவர். தமிழகத்தின் சப்தவிடங்கத் தலங்களில் திருநள்ளாறும் ஒன்று. விடங்க என்றால் செதுக்கப்படாத மூர்த்தி என்று பொருள். ஏழு சுயம்புத் தலங்களில் திருநள்ளாறும் ஒன்று. தர்ப்பாரண்யேஸ்வரர் ஆலயத்தில் அருளும் சனிபகவான், ஈசனின் கட்டளைப்படி இங்கு வந்து வணங்கும் பக்தர்களுக்கு நல்வாழ்வினை அளிக்கும் பணியை மேற்கொண்டுள்ளார். சனிபகவானால் கடுமையாக பாதிக்கபட்டிருந்தாலும், இந்தத் தலத்துக்கு வந்து ஈசனை வணங்கினால் நல்ல பலன்களைப் பெறுவார்கள் என்பது நம்பிக்கை.

தேவர்களை மறுத்து நிடத நாட்டு மன்னன் நளனைக் கரம் பிடித்தாள் சேதி நாட்டு இளவரசி தமயந்தி. இதனால் கோபமான தேவர்கள், சனிபகவானின் வழியாக நளனை கடுமையாக சோதித்தார்கள். எல்லா செல்வத்தையும் இழந்து, இறுதியில் தமயந்தியையும் பிரிந்து சேவகனாக மாறினான் நளன். பின்னர் இங்குள்ள தர்ப்பாரண்யேஸ்வரரை வணங்கி, சனீஸ்வரனையும் சரணடைந்தான். அதனால், சனிபகவானின் கருணையால் இழந்த தன் நாட்டையும் அளவற்ற செல்வங்களையும் பெற்றான் என்று தலவரலாறு கூறுகிறது. சுனிபகவானின் கருணையை எண்ணி நளராஜனே பலவிதமான பண்டிகைகளை உருவாக்கிக் கொண்டாடி மகிழ்ந்தான். இவன் நீராடிய திருக்குளம் இன்றும் நளதீர்த்தம் என்றே வழங்கப்படுகிறது. ஜன்மச் சனி, கண்ட சனி, அஷ்டமத்து சனி, மத்திய சனி, ஆத்ய சனி, ஏழரை சனி என்று சனிபகவானால் எத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டிருந்தாலும், இந்தத் தலத்துக்கு வந்து பரிகாரம் செய்வது வழக்கம். நளதீர்த்ததில் நீராடி, எள் தீபம் ஏற்றி, கருங்குவளைமலர் சாத்தி சனீஸ்வரனை வணங்கினால் தீராத எந்தத் துயரமும் தீரும்.

திருநள்ளாறு வரும் பக்தர்கள் நளதீர்த்தம் சென்று, வலமாகச் சுற்றி வணங்கி குளத்தின் நடுவே இருக்கும், நளன், தமயந்தி சிலைகளை வணங்க வேண்டும். நல்லெண்ணெய் தேய்த்து, வடக்கு அல்லது கிழக்கு திசை பார்த்து நின்று 9 முறை மூழ்க வேண்டும். குளித்து துவட்டி வேறு ஆடை அணிந்தபிறகு, பிரம்ம தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தங்களில் உள்ள புனித நீரை தெளித்துக்கொள்ள வேண்டும்.

திருக்கோயிலினுள் இருக்கும் ஸ்வர்ண கணபதி, முருகர் சந்நிதியை வணங்கி, திருநள்ளாற்றின் நாயகர் தர்ப்பரண்யேஸ்வரரையும், அடுத்து தியாகேசரையும் வணங்க வேண்டும். தொடர்ந்து பிராணேஸ்வரி அம்மனை வணங்கிய பின்னரே இங்கிருக்கும் சனிபகவானை தரிசிக்க வேண்டும் என்பது ஐதீகம். எள் தீபம் ஏற்றுவது தொடங்கி அவரவர் வசதிக்கு ஏற்ப பூஜைகளைச் செய்து சனிபகவானுக்கான பரிகாரங்களைச் செய்து கொள்ளலாம். சனிபகவானை சனிக்கிழமை மட்டுமின்றி வாரத்தின் எல்லா நாள்களிலும் வரும் சனிஹோரை நேரத்தில் வழிபடலாம். இதனாலும் கூடுதல் பலன் கிட்டும். கடுமையான சனி தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பாதிப்பிலிருந்து விடுபட, சனிபகவானை பிரார்த்தித்து, சனிக்கிழமை தோறும் ஒருவேளை உபவாசம் இருத்தல் நல்லது. சனிபகவானுக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் செய்து, கறுப்பு வஸ்திரம், வடைமாலை சாத்தி, எள்ளுச் சாதம் நைவேத்தியம் செய்யலாம். எள்ளால் ஆன இனிப்புப் பலகாரங்களைப் பெருமாளுக்கும் சனிபகவானுக்கும் படைக்கலாம். சனிபகவானின் அருளினைப் பெற ஆஞ்சநேயர், கணபதியை வணங்கலாம். சனி பகவான் நீதிமான், நியாயவான் என்று போற்றப்பெறுபவர். நமக்குரிய கடமைகளைத் தவறாமல் செய்து, ஈஸ்வரனை வழிபட்டு வந்தால் அதிக பாதிப்பின்றி வாழலாம்.


சனிபகவானின் அருளினைப் பெற்று பாதிப்புகள் விலக பலரும் கூடி சனீஸ்வரத் தலங்களில் பூஜைகள் செய்து வருகின்றனர். அதன்படி திருநள்ளாறும் கடந்த ஒருவாரமாக ஆயிரக்கணக்கான பக்தர்களால் நிரம்பி வருகிறது.

அள்ளிக்கொடுப்பதில் வள்ளலான சனிபகவானை வழிபட்டு சகல நன்மைகளையும் பெறலாம்.



# Entertainment Corner

## குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. அரசரின் மகள்...
4. சுட்டிகளின் கனவு நாயகன்...
6. அரசர்கள், முன்னோர்கள், சாதனையாளர்கள் பற்றிச் சொல்வது...
8. அறிவுக் கண்ணைத் திறப்பது...
10. உலகம் போற்றும் தமிழ்ப் பொதுமறை...
12. தமிழர் பண்டிகை...
14. ஜல்லிக்கட்டு நாயகன்...
15. காகிதப் பறவை...
18. இசையோடு வருவது...
20. சுற்றிச் சுழன்று ஆடும்...
21. சுற்றுச்சூழல் கெட்டால்...
22. மனிதனின் ஈடில்லாத் தோழன்...

மேலிருந்து கீழ்

1. தமிழோ, ஆங்கிலமோ எல்லா மொழிக்கும் இது முக்கியம்...
2. மீனின் சிறைச்சாலை...
3. மலையின் மகுடம்...
4. கூச்சலிடு என்பதை இப்படியும் சொல்லலாம்...
5. பழத்தின் வேறு சொல்...
7. முருகனின் மனைவி...
9. படிப்புடன் இதுவும் முக்கியம்...
10. ஒட்டகத்துக்கு இருப்பது...
11. தண்ணீர்ப் பாத்திரம்...
12. குழந்தைகளுக்குப் பிடித்தது...
13. ராமானுஜன் என்றதும் நினைவுக்கு வருவது...
15. தீபாவளித் தோழன்...
16. சிறியவர் வளர்ந்தால் பெரியவர், ஊர் வளர்ந்தால்...
17. இனிக்கும் கல்... கல்கண்டு அல்ல...
19. களிறு என்பது...
20. பால் கொடுக்கும்...

## எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்..........

கணவன் : "வரதட்சணை வாங்கிட்டு கல்யாணம் செஞ்சது என் மனசை உருத்திக்கிட்டே இருக்குது"

மனைவி : "அதுக்காக இப்போ என்ன பண்ணுவதாம்...?"

கணவன் : "வரதட்சணை வாங்காம இன்னொரு கல்யாணம் செய்துகிட்டு பிராயச்சித்தம் செய்யலாம்னு இருக்கேன்"

மனைவி : கிர்ர்ர்ர்ர்.....

கணவன் : நேத்து ராத்திரி... நான் குடிச்சிட்டு வந்தப்போ... நீ பேசிய வார்த்தை ஒவ்வொன்றும் என்னை செருப்பால அடிச்சது போல இருந்துச்சி...

மனைவி : அட போங்க... குடிச்சிருந்ததால.... உங்களுக்கு தெரியல.. நெசமாவே நன்... செருப்பால தான் அடிச்சேன்

## விடுகதை விளையாட்டு

1. எத்தனை முறை திறந்து மூடினாலும் ஓசை வராத கதவு -அது என்ன?
2. காலையில் வெளிப்பட்டவன், இரவுக்கு கட்டுப்படுவான் -அவன் யார்?
3. பையைத் திறந்தால் பவள முத்துக்கள் -அது என்ன?
4. உச்சியிலே ஒரு இனிப்புக் கோட்டை -அது என்ன?
5. வாயில்லாத சின்னவளுக்கு, பயிற்சி கொடுத்தால் பேசவும் செய்வாள் -அவள் யார்?

விடை : 1.கண் இமை 2.நிழல் 3.மாதுளை 4.தேன்கூடு 5.கடிதம்

## மெழுகுவர்த்தி!

**எ**கிப்தியர்கள், கடவுள் வணக்கத்தின் போதும், மெழுகுவர்த்தி ஏற்றுவதை வழக்கமாக வைத்திருந்தனர். தீபவழிபாடு இறையருளை பெற்றுத் தரும் என்பதால், பிறந்தநாள் 'கேக்'கிலும் மெழுகுவர்த்தி ஏற்றும் பழக்கம் ஏற்பட்டது. கிறிஸ்துமஸ் பண்டிகையிலும் தீபம் ஏற்றுவது வழக்கமாக உள்ளது.

## அறிவியல் தகவல்

### சமையல் எண்ணெயை எரிபொருளாக்கலாம்

சமையல் எண்ணெய், உலகெங்கும் பல லட்சம் லிட்டர்கள், தினமும் வீணடிக்கப்படுகின்றன. அதை மறு சுழற்சி செய்ய பல உத்திகள் இருந்தும் இது தொடர்கிறது. இந்த நிலையை மாற்ற, ஆஸ்திரேலியாவின் ஆர்.எம்.ஐ.டி.யை சேர்ந்த விஞ்ஞானிகள் ஒரு புதிய பொருளை உருவாக்கியுள்ளனர்.

இது ஒரே நேரத்தில் கிரியா ஊக்கியாகவும், நுண்வடிகட்டியாகவும், கடற்பஞ்சு போன்ற உறிஞ்சியாகவும் செயல்படுகிறது. இதனால், ஒரு பக்கம் கசடு மிக்க சமையல் எண்ணெயை செலுத்தினால், அது பல்வேறு வேதி வினைகளுக்கு உள்ளாகி, சுத்திகரிக்கப்பட்டு, குறைந்த கரிமச் செறிமானம் கொண்ட உயிரி டீசல் திரவமாக வெளியே வருகிறது.

தற்போது பரிசோதனையில் உள்ள இந்த வித்தியாசமான நேனோ வடிகட்டி, அடுத்து விவசாயக் கழிவுகள், ரப்பர் கழிவு, நுண் பிளாஸ்டிக் கழிவு போன்ற வற்றையும் வடித்தெடுக்கும்படி செய்யலாம் என ஆர்.எம்.ஐ.டியின் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

## அறுசுவை சமையல்

### ஆங்கிலப் புத்தாண்டு ஸ்பெஷல் அண்ணாச்சி நெய் ரவா கேசரி

**தேவையான பொருட்கள்**

ரவை - 1கப்
சர்க்கரை - 11/2கப்
தேங்காய்ப்பால் - 2கப்
ஏலக்காய் - 4
பட்டை - 2
கிராம்பு - 4
பைன்ஆப்பிள் எசன்ஸ் - 1ஸ்பூன்
Yellow food கலர்
முந்திரி திராட்சை
நெய் - 50கிராம்
சிறிதாக வெட்டிய அண்ணாச்சி துண்டுகள்

**செய்முறை**

❖ ரவையை நன்றாக வறுக்கவும் வாணலியில் நெய் சேர்த்து ஏலக்காய் பட்டை கிராம்பு சேர்க்கவும். பின்பு தேங்காய்ப்பால் சேர்த்து கொள்ளவும்

❖ தேங்காய்ப்பால் கொதி வந்தவுடன் அதில் ரவை food கலர் சேர்த்து நன்கு கிளறவும்.

❖ சர்க்கரை சேர்த்து கிளறியவுடன் அதில் பைன்ஆப்பிள் எசன்ஸ் சேர்க்கவும் பிறகு நறுக்கிய அண்ணாச்சி துண்டுகளை சேர்க்கவும் முந்திரி திராட்சை நெய்யில் வறுத்து சேர்த்தால் சுவையான நெய் ரவா கேசரி தயார்

## விஷ்ணுவின் 108 பெயர்கள்



பகவான் விஷ்ணுவின் எட்டாவது அவதாரமே ஸ்ரீ கிருஷ்ணர். மகா பாரதத்தில் இவரை பற்றிய ஏராளமான குறிப்புகளை நாம் பார்க்க இயலும். பகவான் கிருஷ்ணர் மூலம் இவ்வுலக தர்மமானது நிலைநாட்டப்பட்டது. கண்ணன், கோவிந்தன், கேசவன், கோபாலன் என இவருக்கு பல பெயர்கள் உள்ளன. அதில் 108 பெயர்கள் தனி தனியாகவும் போற்றி வடிவிலும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணரின் மந்திரம் ஜபிக்க சிரமப்படுவோர் இதை ஜபிக்கலாம்.

1 அச்சாலன், 2. அச்சுதன், 3. அற்புதன், 4. ஆதிதேவன், 5. ஆதித்தியன், 6. அஜென்மா, 7. அஜெயன், 8. அட்சரன், 9. அமிர்தன், 10. ஆனந்தசாகரன், 11. அனந்தன், 12. அனந்தஜித், 13. அனயன், 14. அனிருத்தன், 15. அபாரஜித், 16. அவ்வியக்தன், 17. பிகாரி, 18. பாலகோபாலான், 19. பாலகிருஷ்ணன், 20. சதுர்புஜன், 21. தானவேந்திரன், 22. தயாளன், 23. தயாநிதி, 24. தேவாதிதேவன், 25. தேவகிநந்தன், 26. தேவேஷ்வா7. தர்மாதியட்சர், 28. திரவின், 29. துவாரகாபதி, 30. கோபாலன், 31. கோபாலப்பிரியன், 32. கோவிந்தன், 33. ஞானேஸ்வரன், 34. ஹரி, 35. இரண்யகர்பன், 36. ரிஷிகேசன், 37. ஜெகத்குரு, 38. ஜெகதீஷ்வரன், 39. ஜெகன்நாதர், 40. ஜெனார்தனன், 41. ஜெயந்தன், 42. ஜோதிராதித்தியன், 43. கமலநாதன், 44. கமலநயனன், 45. கம்சந்தகன், 46. காஞ்சலோசனன், 47. கேசவன், 48. கிருட்டிணன், 49. இலக்குமிகாந்தன், 50. லோகாதியட்சன், 51. மதனன், 52. மாதவன், 53. மதுசூதனன், 54. மகேந்திரன் 55. மன்மோகன், 56. மனோகரன், 57. மயூரன், 58. மோகனன், 59. முரளி, 60. முரளிதரன், 61. முரளிமனோகரன், 62. நந்தகுமாரன், 63. நந்தகோபாலன், 64. நாராயணன், 65. நவநீதசோரன், 66. நிரஞ்சனன், 67. நிர்குணன், 68. பத்மஹஸ்தன், 69. பத்மநாபன், 70. பரப்பிரம்மம், 71. பரமாத்மா, 72. பரமபுருஷன், 73. பார்த்தசாரதி, 74. பிரஜாபதி, 75. புண்ணியவான், 76. புருசோத்தமன், 77. ரவிலோசனன், 78. சுகஸ்ராட்சகன் 79. சஹஸ்ரஜித்தன், 80. சாட்சி, 81. சனாதனன், 82. சர்வஜனன், 83. சர்வபாலகன், 84. சர்வேஸ்வரன், 85. சத்தியவசனன், 86. சத்தியவிரதன், 87. சாதனன், 88. சிரேஸ்டன், 89. ஸ்ரீகாந்தன், 90. சியாம், 91. சியாமசுந்தரன், 92. சுதர்சனன், 93. சுமேதா, 94. சுரேஷ்வரன், 95. சுவர்க்கபதி, 96. திரிவிக்கிரமன், 97. உபேந்திரன், 98. வைகுந்தநாதன், 99. வர்தமானன், 100. வாசுதேவபுத்திரன், 101. விஷ்ணு, 102. விஸ்வதட்சினன், 103. விஸ்வகர்மன், 104. விஸ்வமூர்த்தி, 105. விஸ்வரூபன், 106. விஸ்வாத்மா, 107. விருசபர்வா, 108. யாதவேந்திரன்

**தங்கம் விலை, வெள்ளி விலை பட்டியல்**

தங்கம் விலை

| 22 கேரட் | 24 கேரட் |
|---|---|
| 1 கிராம் 3920 | 1 கிராம் 3952 |
| 8 கிராம் 31360 | 8 கிராம் 31616 |

வெள்ளி விலை

1 கிராம் 47.4
1 கிலோ 47400

| | |
|---|---|
| Publisher | : R.Rajesh |
| Editor | : Saranya Rajesh |
| Photographs | : Live View Media |
| Marketing manager | : P.Ravikumar |
| Designer | : S.Aswini |

Express Velachery
Weekly - News Paper

37F, Velachery Main Road, Vijayanagar, Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30
044-42077325 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com


DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.

TNBIL04133 R.Dis.No.1845/2014



நீதிக் கதைகள்

# தவளையும் சுண்டெலியும்





## புதுவருடப் பிறப்பு புத்தாண்டின் சிறப்பு

புத்தாண்டு நாள் புதுவருடப் பிறப்பு (New Year's Day) சனவரி 1 அன்று ரோமானியப் பேரரசில் கிமு 45லிருந்து கடைபிடிக்கப்பட்டு வரும் நவீன கிரெகோரியின் நாட்காட்டி, மற்றும் யூலியன் நாட்காட்டி ஆகியவற்றின் முதல் நாளாகும். ரோமானியர்கள் இந்தப் புத்தாண்டு நாளினை ஜானுஸ் என அழைக்கப் படும் வாயில்களின், கதவுகளின் கடவுளுக்காகவே வழங்கி வந்தனர். அந்தக் கடவுளின் பெயரைக் காண்டே ஆண்டின் முதல் மாதமான இது ஜனவரி (சனவரி) என்று அழைக்கப் -படுகிறது. இந்நாட்களில் பல உலக நாடுகளும் கிரெகோரிய நாட்காட்டியையே தங்களது



பொதுவான நாட்காட்டியாகப் பயன் -படுத்துகின்றனர். மேலும், இந்தப் புத்தாண்டு நாளே உலகின் அதிகமாகக் கொண்டாடப்படும் பொது விடுமுறை நாளாகும். இது ஒவ்வொரு வருடமும் நள்ளிரவில் புத்தாண்டு பிறக்கும்போது பட்டாசுகள் வெடித்து, வாணவெடிகள் வெடித்து, இனிப்புகள் வழங்கி கொண்டாடப்படுகிறது.



## வேளச்சேரியில் கிறிஸ்துமஸ் அலங்கார பொருட்கள் விற்பனை

கிறிஸ்துமஸ் பண்டிகை 25-ந் தேதி (வெள்ளிக்கிழமை) அன்று கொண்டாடப் -பட்டது. இதையொட்டி சென்னை வேளச்சேரி கடைகளில் அலங்கார பொருட்கள் விற்பனை மும்முரமாக இருந்தன. கிறிஸ்தவர்கள் தங்களது வீடுகளில் ஸ்டார்களை தொங்க விடுவதற்கும், குடில் அமைப்பதற்கும், வீடுகளை அலங்கரிப்பதற்குமான அலங்காரபொருட்களை வாங்குவதற்கு கடைகளுக்கு சென்று பொருட்களை வாங்கி சென்றனர்.

## புத்தாண்டு கொண்டாட தடை

டிசம்பர் 31, ஜனவரி 1 தேதிகளில் கடற்கரைகளில், சாலைகளில் புத்தாண்டு கொண்டாட தடை.

டிசம்பர் 31 நள்ளிரவு மற்றும் ஜனவரி 1 ஆகிய தேதிகளில் கடற்கரைகளில், சாலைகளில் ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு தடை 2021ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு, உணவகங்கள், தங்கும் விடுதிகள், கேளிக்கை விடுதிகள் மற்றும் இது போன்ற இதர இடங்களில் 31.12.2020 அன்று இரவு பொதுவாக நடத்தப்படும் ஆங்கில புத்தாண்டு விழா கொண்டாட்டங்களில், அதிகமான அளவில் பொதுமக்கள் பங்கேற்க வாய்ப்புள்ளது. இதுவன்றி, 2021ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு, 31.1.2020 அன்று இரவு முதல் அனைத்து கடற்கரைகளிலும், சாலைகளிலும் பொதுமக்கள் மிக அதிகமான அளவில் கூட வாய்ப்புள்ளது. இதன் காரணமாக, தற்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப் -பட்டுள்ள, கொரோனா நோய்த் தொற்றானது, அதிகரிக்க வாய்ப்புள்ளது. சில வெளிநாடுகளில் கொரோனா நோய்த் தொற்றானது தற்போது மீண்டும் பரவி வருகின்ற நிலையில், நோய்த் தொற்று தடுப்பு பணிகளை மேலும் தீவிரப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, உணவகங்கள், தங்கும் விடுதிகள், இது போன்ற இதர இடங்கள் உணவகங்கள் வழக்கம் போல் செயல்படும். ஆனால் 31.12.2020 அன்று இரவு நடத்தப்படும் 2021ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டு விழா கொண்டாட்டங்களுக்கு மட்டும் அனுமதி கிடையாது. மேலும், அனைத்து கடற்கரைகளிலும், சாலைகளிலும் 2021ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு அனுமதி இல்லை என்பதால்,31.12.2020 மற்றும் 1.1.2021 ஆகிய நாட்களில் பொதுமக்கள் கடற்கரைகளில் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

CIN: U60210TN2020PTC134769
SML CHENNAI CARS PVT.LTD
Drive The World
ONE STOP DESTINATION FOR ALL YOUR CAR NEEDS
No 37 F, Vijaya Nagar Road, velachery, Chennai-600042.
Email: chennaicars555@gmail.com | www.chennaicar.in
Ph. 044 42106600 | 91504 72441

Nellai Machãnin
RUSIKKARAN TM
RESTAURANT | CATERING SERVICE | VEG & NON VEG
37F | VELACHERY TO TAMBARAM MAIN ROAD | VIJAY NAGAR
VELACHERY | CHENNAI 600 042 | TN | MOBILE 759 825 6999
Email:rusikkaran@gmail.Com

Hotel Nestle Inn
Good night guranteed...
Velachery
CONTACT : +91 9986 562121
044 4860 02026
CONTACT : +91 98841 45256

நாவில் நடனமாடும் சுவைக்கு...
கங்கா ஸ்வீட்ஸ்
GANGA SWEETS
PURE GHEE SWEETS
BRANCHES
Anna Nagar Blue Star 4263 3086
Anna Nagar West Extn. 4264 5917
Anna Nagar 1st Main Road 4350 0998
Thiruvanmiyur 4230 0911
Velachery 4232 5234
Pallavaram 4207 3157
Kolathur 4286 6809/10
Mail us @ gangasweets@gmail.com
Visit us @ www.gangasweets.com
HEAD OFFICE
Tel.: 4264 5911 / 2615 4635

Cell : 98412 99770
98412 80515
P.R. MOTORS
Buying & Selling All New / Used Vehicle with Finance Arrangement on Commission Basis only
BAJAJ HERO HONDA TVS YAMAHA
No.37/F, Velachery Main Road, Vijayanagar, Chennai - 42.

Cozy Bean Bags
Park yourself comfortably
VELACHERY TARAMANI
ANNANAGAR URAPAKKAM
LEADING BEAN BAG MANUFACTURER
044-65553333 / 93839 78910 / 93822 18477

Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, No.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH